கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
வடக்கு மாகாண சபை, උතුරු පළාත් සභාව, Northern Provincial Council
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
චෙම්මනි පාර, නල්ලූර්, යාපනය
Chemmany Road, Nallur, Jaffna
Website: www.edumin.np.gov.lk e-mail: npplame@yahoo.com, npmoeplan@gmail.com

எனது இல / මගේ අංකය / My No. NP/03/01/02/06 — உமது இல / ඔබේ අංකය / Your No. — திகதி / දිනය / Date 2021.01.27

சுற்று நிருப இல: **2021/01**

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், மற்றும்
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்.

## அதிபர் வெற்றிடம் நிரப்புதல்

<u>நியமன நிபந்தனைகள்</u>

**1.** தங்கள் வலயத்திலுள்ள மாகாணப் பாடசாலைகளில் ஓய்வு பெறல் காரணமாக அதிபர் வெற்றிடம் ஏற்படவுள்ள திகதிக்கு மூன்று (03) மாதங்களுக்கு முன்பதாக அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

**2.** விசேட சந்தர்ப்பங்களில் வெற்றிடங்களை ஒரு மாத காலத்திற்குள் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

**3.** அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு, கீழே குறிப்பிடப்பட்ட நியமன நிபந்தனைகளுக்கமைய நேர்முகப் பரீட்சை ஒன்றினை நடாத்தி அதனடிப்படையில் பொருத்தமான அதிபர் ஒருவர் நேர்முகத் தேர்வுக் குழுவால் சிபார்சு செய்யப்படல் வேண்டும்.

**4.** இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த அதிபர் ஒருவரை நியமிக்க முடியாத சந்தர்ப்பத்தில் கடமைகளை கவனிக்கும் அடிப்படையில் தகுதியான சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரை நியமனம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். சிரேஷ்ட ஆசிரியர் ஒருவரை நியமிப்பதில் இடர்பாடுகள் ஏற்படின் பாடசாலை ஆசிரியர் குழாமில் இருந்து தகுதியான ஆசிரியர் ஒருவர் கடமைகளை கவனிக்கும் அடிப்படையில் வலயக் கல்விப் பணிப்பாளரால் நியமித்தல் வேண்டும்.

**5.** பாடசாலைகளின் தரத்திற்கு ஏற்ப அதிபர் தரம் பின்வருமாறு அமையும்.

| | |
|---|---|
| 1AB / 1C பாடசாலை | இ.அ.சே. வகுப்பு 1 |
| வகை II பாடசாலை | இ.அ.சே. வகுப்பு 2 |
| வகை III பாடசாலை | இ.அ.சே. வகுப்பு 3 |

**6.** நியமனம் பெறும் அதிபர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் இருந்து ஆகக்குறைந்தது மூன்று (03) வருட காலம் அப்பாடசாலையில் சேவையாற்றக் கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.

**7.** வேறு மாவட்டங்களில் வெற்றிடம் காரணமாகவும், சேவையின் தேவை கருதியும், நியமிக்கப்பட்ட அதிபர் தரத்தில் உள்ளோரும் குறைந்தது 03 வருட சேவையைப் பூர்த்தி செய்ததன் பின்னர் விரும்பிய வெற்றிடமுள்ள பாடசாலைக்கு விண்ணப்பம் கோரும்போது விண்ணப்பிக்கமுடியும்

செயலாளர் / ලේකම් / Secretary 021-2219259
அலுவலகம் / කාර්යාලය / Office 021-223 1343 (Gen.) 021-222 9673 (Senior Asst. Sec.) 021-222 2283 (Chief. Acct.) 021-222 2237 (Dir. Plan.) 021-222 0037 (DDE) 021-222 2219 (DSW) 021-222 0039 (A.O.)
தொலைநகலி / ෆැක්ස් / Fax 021 - 222 0794 (Gen) 021 - 222 2239 (Plan) 021 - 222 2293 (Acct)

8.தற்போது கடமையாற்றும் பாடசாலையில் அதிபராக 03 வருட சேவையை நிறைவு செய்திருத்தல் வேண்டும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களுக்கும் மற்றும் பிரதி அதிபர், உதவி அதிபர் ஆகியோர்களுக்கும் இது பொருத்தமற்றது.

## பின்பற்றப்படவேண்டிய நடைமுறைகள்

**01.** புதிதாக நியமனம் பெறும் அதிபர்களுக்கு சேவை நிலையம் வழங்கும் அதிகாரம், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கே உரியது.

**02.** ஆகக்குறைந்தது மூன்று (03) மாதங்களுக்குள் வெற்றிடம் ஏற்படும் சகல பாடசாலைகளுக்கும் ஒரே தடவையில் திறந்த விண்ணப்பம் கோரப்படல் வேண்டும்.

**03.** **a.** வகை II, வகை III பாடசாலை அதிபர் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் வலயக்கல்விப் பணிப்பாளரினால் கோரப்படல் வேண்டும்.

**b.** வகை II, வகை III பாடசாலை அதிபர் விண்ணப்பங்களை அட்டவணைப்படுத்திய பின்னர் வலயக்கல்விப் பணிப்பாளரை தலைவராகவும் மாகாணக் கல்வித் திணைக்களம் / வலயக்கல்வி அலுவலகம் ஆகியவற்றில் கடமையாற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட நேர்முகத்தேர்வுச் சபையை அமைத்து நேர்முகத்தேர்வு நடாத்தி, பரிந்துரையை மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக மாகாணக் கல்விச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**04.** a. 1AB, 1C பாடசாலை அதிபர் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் மாகாணக் கல்விச் செயலாளரினால் கோரப்படல் வேண்டும்.

b. 1AB, 1C பாடசாலை அதிபர் விண்ணப்பங்கள் அட்டவணைப்படுத்திய பின்னர் மாகாணக் கல்விப் பணிப்பாளரை தலைவராகவும் மாகாணக் கல்வி அமைச்சு / மாகாணக் கல்வித் திணைக்களம் வலயக்கல்வி அலுவலகம் ஆகியவற்றில் கடமையாற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட நேர்முகத்தேர்வுச் சபையை அமைத்து நேர்முகத்தேர்வு நடாத்தப்படல் வேண்டும்.

**05.** தேசிய பாடசாலைகளிலிருந்து விண்ணப்பிப்பவர்கள் வடமாகாணப் பாடசாலைகளுக்கு தெரிவு செய்யப்படின் அதற்கான முறையான விடுவிப்பை வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு ஊடாகப் பெற்று **03** மாதத்திற்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**06.** வேறுமாகாணம் / மாவட்டம் / வலயங்களிலிருந்து இடமாற்றம் பெற்றுவரும் அதிபர்களுக்கு அவர்களின் அதிபர் தரத்திற்கேற்ப வட மாகாணத்தில் வெற்றிடமுள்ள பொருத்தமான பாடசாலைகளுக்கு மாகாணக்கல்விச் செயலாளரினால் சேவைநிலையம் வழங்கப்படும்.

**07.** அதிபர் ஒருவர் கற்கைநெறிக்கான முழுநேரக்கற்கை விடுமுறையினைப் பெற்று கற்கைநெறியினைப் பூர்த்தி செய்ததன் பின்னர் குறித்த அதிபர் வேறு பாடசாலைக்கு நிலைய மாற்றம் செய்யப்பட்டு கடமையைப் பொறுப்பேற்கவேண்டும்

**08.** குறித்த பாடசாலையின் தரத்திற்குரிய அதிபர் தரத்தைக் கொண்டிராத அதிபர்களுக்கு சேவை நிலையம் வழங்கும்போது அடுத்த தரத்தில் உள்ளவருக்கு "பதில் அதிபர்" என்ற பதத்துடனும் ஏனைய அதிபர் தரத்தையுடையவர்களுக்கு "கடமைகளை கவனிக்கும் அதிபர்" என்ற பதத்துடன் கடிதம் வழங்கப்படல் வேண்டும்.

செயலாளர் / ලේකම් / Secretary: 021-2219259
அலுவலகம் / කාර්යාලය / Office: 021-223 1343 (Gen.) 021-222 9673 (Senior Asst. Sec.) 021-222 2283 (Chief. Acct.) 021-222 2237 (Dir. Plan.) 021-222 0037 (DDE) 021-222 2219 (DSW) 021-222 0039 (A.O.)
தொலைநகல் / ෆැක්ස් / Fax: 021 - 222 0794 (Gen) 021 - 222 2239 (Plan) 021 - 222 2293 (Acct)

09. குறித்த பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் அதிபரின் **03** வருட செயலாற்றுகை திருப்தியளிக்காவிடின் அவரை உடனடியாக பாடசாலையில் இருந்து இடமாற்றம் செய்வதற்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

10. பதில்அதிபர்/கடமைகளை கவனிக்கும் அதிபர் நியமனத்தின்போது முதலாவது ஆண்டில் அதேபாடசாலையில் தகுதிகாண் நிலையில் வைத்திருக்கப்படுவர். செயலாற்றுகை திருப்தியளிக்காவிடின் காரணம் கூறாது அவரை உடனடியாக பாடசாலையிலிருந்து இடமாற்றம் செய்வதற்கு மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளருக்கு பூரணஅதிகாரம் உண்டு.

11. அதிபர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரப்படும் போது குறித்த பாடசாலையின் அதிபர் தரத்திற்கான இலங்கை அதிபர் சேவை தரத்தை சேர்ந்தவர்களும், அதற்கு அடுத்த நிலையிலுள்ள இலங்கை அதிபர் சேவை தரத்தை சேர்ந்தவர்களும், விண்ணப்பித்து இருப்பின் விண்ணப்பம் கோரப்பட்ட பாடசாலையின் தரத்திற்கு உரியவர்களது விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவர்.

12. அதிபர் தரம் III ஐச் சேரந்த அதிபர்கள் வகை III பாடசாலையில் அதிபராக குறைந்தது மூன்று (3) வருடங்கள் கடமையாற்றியிருந்தாலே வகை II பாடசாலைகளின் அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

13. வகைII பாடசாலைகளில் அதிபராக குறைந்தது மூன்று (3) வருடங்கள் கடமை யாற்றியிருந்தாலே 1AB, 1C பாடசாலைகளின் அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

14. அதிபர் பதவி வெற்றிடத்திற்கு முதலாம் தடவை விண்ணப்பம் கோரப்படும் போது எவரும் விண்ணப்பிக்காத பட்சத்தில் வலயக்கல்விப் பணிப்பாளரின் / மாகாணக்கல்விப் பணிப்பாளரின் பரிந்துரையின் அடிப்படையில் அதிபர் நியமனத்தை மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் செய்யலாம்.

15. இலங்கை அதிபர் சேவையில் உள்ளவர்கள் தமது தரத்திற்குரிய பொருத்தமான பாடசாலையிலும் பார்க்க குறைந்த வகையைச் சேர்ந்த பாடசாலைகளில் கீழுழைப்பு நிலையில் கடமைபுரியும் அதிபர்கள் தங்கள் தரத்திற்குரிய பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படும்போது கட்டாயம் விண்ணப்பிக்கவேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் அவர்களது அதிபர் தரத்திற்கேற்ப பொருத்தமான பாடசாலைக்கு இடமாற்றம் வழங்கும் அதிகாரம் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு உண்டு.

16. இச்சுற்றுநிருபம் **2021.02.01** முதல் நடைமுறைப்படுத்தபடும் என்பதுடன் எமது **2015/06** ம் இலக்க **2015.05.28** ம் திகதிய சுற்று நிருபம் இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றது.

17. இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாணக்கல்வி அமைச்சு செயலாளரினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதியானதாகும்.

இ.இளங்கோவன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வடமாகாணம்

இ.இளங்கோவன்,
செயலாளர்.


| | | | | |
|---|---|---|---|---|
| செயலாளர் / ලේකම් / Secretary | 021-2219259 | அலுவலகம் / කාර්යාලය / Office | 021-223 1343 (Gen.)<br>021-222 9673 (Senior Asst. Sec.)<br>021-222 2283 (Chief. Acct.)<br>021-222 2237 (Dir. Plan.) | 021-222 0037 (DDE)<br>021-222 2219 (DSW)<br>021-222 0039 (A.O.) |
| தொலைநகலி / ෆැක්ස් / Fax | 021 - 222 0794 (Gen)<br>021 - 222 2239 (Plan)<br>021 - 222 2293 (Acct) | | | |

# புள்ளி வழங்கல் திட்டம்

**01.** சேவை மூப்பு

| | |
|---|---|
| **a.** இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1 | வருடம் ஒன்றுக்கு 03 புள்ளி |
| **b.** இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 | வருடம் ஒன்றுக்கு 02 புள்ளி |
| **c.** இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 | வருடம் ஒன்றுக்கு 01 புள்ளி |

( ஆகக்கூடியது 25 புள்ளிகள்)

**02.** சேவைக்காலம்

**I.** மிகக்கஷ்ட / கஷ்ட பிரதேச பாடசாலை (மொத்த சேவைக்காலத்தில் )

| | |
|---|---|
| a. மிகக்கஷ்ட பிரதேச பாடசாலை சேவைக்காலம் | வருடம் ஒன்றுக்கு 01 புள்ளி |
| b. கஷ்ட பிரதேச பாடசாலை சேவைக்காலம் | வருடம் ஒன்றுக்கு ½ புள்ளி |

( ஆகக்கூடியது 05 புள்ளிகள்)

**II.** வெளிமாவட்டம் (அதிபர் தரத்தில் சேவைக்காலம்)

| | |
|---|---|
| **a.** வதிவிட மாவட்டத்திற்கு வெளியேயானது | வருடம் ஒன்றுக்கு 01 புள்ளி |

( ஆகக்கூடியது 05 புள்ளிகள்)

**03.** மொழித்தேர்ச்சி

**a.** ஆங்கிலம் (ஆகக்கூடியது ஒன்றிற்கு மட்டும்)

I. க.பொ.த.(சாதாரணம்)

| பழைய பாடத்திட்டம் (2001முன்னர்) | | | புதிய பாடத்திட்டம்(2001 இலிருந்து) | | |
|---|---|---|---|---|---|
| D | - | 04புள்ளி | A | - | 04புள்ளி |
| C | - | 03புள்ளி | B | - | 03புள்ளி |
| S | - | 01புள்ளி | C | - | 02புள்ளி |
| | | | S | - | 01புள்ளி |

II. க.பொ.த(உயர்தரம்) – பிரதான பாடம்

சித்தி பெற்றால் - 05 புள்ளி

III. வேறு தகைமை

| | |
|---|---|
| a. ஆங்கில மொழி மூலம் பட்டம் | 04புள்ளி |
| b. பல்கலையில் ஆங்கிலம் ஒரு பாடம் | 05புள்ளி |
| **c.** ஆங்கில டிப்ளோமா (2 வருட கற்கை) | 05புள்ளி |

(05புள்ளி)


செயலாளர் / ලේකම් / Secretary – 021-2219259

அலுவலகம் / කාර්යාලය / Office – 021-223 1343 (Gen.), 021-222 9673 (Senior Asst. Sec.), 021-222 2283 (Chief. Acct.), 021-222 2237 (Dir. Plan.), 021-222 0037 (DDE), 021-222 2219 (DSW), 021-222 0039 (A.O.)

தொலைநகலி / ෆැක්ස් / Fax – 021 - 222 0794 (Gen), 021 - 222 2239 (Plan), 021 - 222 2293 (Acct)

b. இரண்டாம் மொழி சிங்களம் / தமிழ்

| பழைய பாடத்திட்டம் (2001முன்னர்) | | புதிய பாடத்திட்டம் (2001 இலிருந்து ) | |
|---|---|---|---|
| D - | 05புள்ளி | A - | 05புள்ளி |
| C - | 03புள்ளி | B - | 03புள்ளி |
| S - | 01புள்ளி | C - | 02புள்ளி |
| | | S - | 01புள்ளி |

(05புள்ளி)

உயர் தகைமை மட்டும் கருத்தில் கொள்ளப்படும்

( ஆகக்கூடியது 10 புள்ளிகள்)

04. கல்வித்தகைமை (ஆகக்கூடியது ஒன்றிற்கு மட்டும்)

a. கலாநிதி / முதுதத்துவமாணி 10புள்ளி
b. முதுமாணி / கல்விமுதுமாணி 08புள்ளி
c. வகுப்புச்சித்தியுடனான பட்டம் / கல்விமாணி 06புள்ளி
d. பொதுப் பட்டம் / கல்விமாணி 04புள்ளி
e. பயிற்றப்பட்ட ஆசிரியர் / கல்வியியற் கல்லூரி டிப்ளோமா 03புள்ளி
f. க.பொ.த.(உயர்தரம்) 02புள்ளி

( ஆகக்கூடியது 10 புள்ளிகள்)

05. தொழில் தகைமை (ஆகக்கூடியது ஒன்றிற்கு மட்டும்)

a. கல்வி முகாமைத்துவத்தில் கலாநிதிபட்டம் (கௌரவப்பட்டம் அல்லாத) / கல்விமுகாமைத்துவத்தில்முதுதத்துவமாணி 10புள்ளி
b. முதுமாணி ( கல்வி முகாமைத்துவம் ) 08புள்ளி
c. பட்டமேற்கல்வி முகாமைத்துவ டிப்ளோமா / பட்ட மேற்கல்வி டிப்ளோமா 06புள்ளி
d. பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா 04புள்ளி

( ஆகக்கூடியது 10 புள்ளிகள்)

06. செயலாற்றுகைகள்

I. பரீட்சைப் பெறுபேறுகள் (வளர்ச்சிப்போக்குக் காட்டியிருப்பின்)
(இறுதி 05 வருடங்களின் சராசரியாக )
(அதிபர் / பிரதி அதிபர் / உதவி அதிபர் ஆகியோருக்கு பொருந்தும் )

a. க.பொ.த(உ.த)(பல்கலைக்கழக அனுமதி)
(கணித விஞ்ஞான கலை
வர்த்தக தொழில்நுட்பப்பிரிவு)
b. க.பொ.த(சாதாரணம்)
c. 5 ம் ஆண்டு புலமைப் பரீட்சை

சராசரி
90% மேல் - 10புள்ளி
80% மேல் - 08புள்ளி
70% மேல் - 06புள்ளி
60% மேல் - 04புள்ளி
50% மேல் - 02புள்ளி

(10 புள்ளி)

செயலாளர் / ලේකම් / Secretary 021-2219259
அலுவலகம் / කාර්යාලය / Office 021-223 1343 (Gen.) 021-222 9673 (Senior Asst. Sec.) 021-222 2283 (Chief. Acct.) 021-222 2237 (Dir. Plan.) 021-222 0037 (DDE) 021-222 2219 (DSW) 021-222 0039 (A.O.)
தொலைநகலி / ෆැක්ස් / Fax 021 - 222 0794 (Gen) 021 - 222 2239 (Plan) 021 - 222 2283 (Acct)

**II.** பாடசாலை வெளிவாரி மதிப்பீட்டுச்சுட்டெண் ( **SEQI** )

கடந்த 03 வருடங்கள் வளர்ச்சிப் போக்கை காட்டியிருப்பின் - (05புள்ளி)

**III.** சர்வதேச, தேசிய, மாகாண, வலய மட்ட போட்டிகள்

a. சர்வதேச மட்டம் - 05புள்ளி

b. தேசிய மட்டம் - 04புள்ளி

c. மாகாண மட்டம் - 03புள்ளி

d. வலய மட்டம் - 02புள்ளி

(05புள்ளி)

**IV. Power Point** அளிக்கை (குறிப்பிடப்படும் தலைப்பில் **5-6** நிமிடங்களுக்குள் நவீன ஊடகப் பயன்பாட்டுடன் அளிக்கை செய்தல் வேண்டும்)

a . நோக்கம் மற்றும் பிரவேசம் 02புள்ளி

b. ஆளுமை மற்றும் நிர்வாகம் 03புள்ளி

c. தொடர்பு சாதனம் தொடர்பிலான விளக்கம் 02புள்ளி

d. நேரமுகாமைத்துவம் 01புள்ளி

e. சமர்ப்பிப்புத் திறமைகள் 02புள்ளி

(ஆகக்கூடியது 10புள்ளி)

**V.** ஆக்கங்கள், செயற்றிட்டங்கள், கௌரவம் (05 வருடங்களுக்கு உட்பட்டவை - 01 புள்ளிவீதம் வழங்கப்படல் வேண்டும்.)

a. தேசிய, மாகாணமட்ட கௌரவம் மற்றும் மெச்சிதழ்கள் (சுயவிபரக் கோவையிலிருந்து உறுதிப்படுத்தப்பட்டது)

b. பாடசாலை சமூக விருப்பு

c. கல்விசார் ஆய்வுகள், (கற்கைநெறிக்கு சமர்ப்பிக்கப்பட்டவை தவிர) நூல் வடிவமான கல்வி தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் (சஞ்சிகைகள் மலர் வெளியீடுகள், பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகள் முதலானவை தவிர்க்கப்படல் வேண்டும்)

d. பாடசாலை செயற்றிட்டங்கள்

e. மாணவர் அபிவிருத்தி செயற்றிட்டங்கள்

f. சமூக அபிவிருத்தி செயற்றிட்டங்கள்

(ஆகக் கூடியது 05புள்ளி)

( ஆகக்கூடியது 35 புள்ளிகள்)